Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, நவம்பர் 18, 2021

**நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் (Nestlé Coconut Plan) தென்னை பயிர்ச்செய்கைச் சபையுடன் இணைந்து மேலும் 1,000 கிராமப்புற குடும்பங்களுக்கு உபகாரம்**
ஐந்தாம் கட்டம் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது

நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் ஐந்தாம் கட்டம், 2021 நவம்பர் 10 ஆம் திகதியன்று அரந்தலாவ, மஹா ஓயாவில் தொடங்கப்பட்டதுடன், அங்கு மேலும் 1,000 தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் தமது வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு 5,000 கலப்பின தென்னம் கன்றுகள் மற்றும் சேதன உரங்கள் வழங்கப்பட்டன. இலங்கையின் தென்னை பயிர்ச்செய்கைச் சபையுடன் இணைந்து நடாத்தப்படும் இக்கட்டமானது, மண் வளம் மற்றும் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல் மற்றும் பல்லுயிரியலைப் பாதுகாத்தல் ஆகியவற்றுடன் உயர்தர விளைச்சலின் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் மற்றும் சேதன பயிர்ச்செய்கை ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

"இலங்கையில் தலைமுறை தலைமுறையாக மிகவும் விரும்பப்படும் தேங்காய், கலாச்சார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாக, தேங்காய் விநியோகமானது வறட்சி மற்றும் பயிர் நோய்களால் பாதிக்கப்பட்டு, பலரின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது. எனவே, இந்த அரச-தனியார் கூட்டாண்மையின் ஒரு அங்கமாக இருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இது கிராமப்புற குடும்பங்கள் பாரம்பரியமற்ற தென்னை பயிர்ச்செய்கை பிரதேசங்களில் எந்த சூழ்நிலையிலும் தாக்குப்பிடிக்கும் தென்னை இனங்களை வளர்க்க உதவுகிறது," என்று தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவரான திருமதி மாதவி ஹேரத் அவர்கள் கூறினார்.

2016 ஆம் ஆண்டு நெஸ்லே மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கை சபை ஆகியவற்றால் தொடங்கப்பட்ட நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் இன்று 4,000 தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆதரவளிக்கிறது. இந்த தென்னை அபிவிருத்தி முயற்சியானது அதன் பங்கேற்பாளர்களுக்கு இலவச கலப்பின தென்னம் கன்றுகள், தொழில்நுட்ப உதவி மற்றும் தீவிர பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் தமது வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு சிறந்த நடைமுறைக்கு உதவ ஐந்து மாதிரிப் பண்ணைகளை நிறுவியுள்ளதுடன், அவற்றில் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள பண்ணை சேதன பயிர்ச்செய்கை முறைகளில் கவனம் செலுத்தும்.

"தேங்காயில் தன்னிறைவு பெற இலங்கைக்கு உதவுவதற்கும், பூமிக்கும், நமது சமூகங்களுக்கும் நன்மைபயப்பதுமான பயிர்ச்செய்கை முறைகளை ஆதரிப்பதற்கும் இது எங்களுக்கு ஒரு வெகுமதியளிக்கும் வாய்ப்பாகும். மீளுருவாக்கம் நோக்கிய பயணத்தில் நாம் காலடியெடுத்து வைத்துள்ள இத்தருணத்தில், எங்கள் பயிர்ச் செய்கையாளர்களின் பண்ணைகள் நிலைபேண்தகைமை கொண்டவையாகவும், இலாபகரமாகவும் இருப்பதை உறுதிசெய்ய சேதன பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான உதவிகளை வழங்க நாங்கள் ஆவலாக உள்ளோம். உணவு முறைமைகளைப் பாதுகாப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் மீட்டெடுப்பதற்கும், ஒவ்வொரு படியாக தொடர்ந்து உதவுவதே எங்கள் இலட்சியம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா அவர்கள் தெரிவித்தார்.

நெஸ்லே நிறுவனம் இலங்கையில் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் நாடு முழுவதும் 10,000 க்கும் மேற்பட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவி வருவதுடன், உள்நாட்டு தேங்காய்த் தொழில்துறைக்கு பல பில்லியன் கணக்கான பங்களிப்பை வழங்கி வருகிறது. நிறுவனம் தொடர்ந்து கிராமப்புற சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு, தொற்றுநோயின் போது கூட, நெஸ்லே லங்கா தொடர்ந்து தேங்காயை கொள்வனவு செய்து, 90 மில்லியன் புத்தம்புதிய தேங்காய்களை கொள்வனவு செய்ய ரூபா 4.5 பில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. மேலும், உலகில் தேங்காய் பால் மா ஏற்றுமதியில் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாக, நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரத்திற்கு ரூபா 3.8 பில்லியன் ஏற்றுமதி வருமானத்திற்குப் பங்களித்துள்ளது.